**Total No. of Pages: 3**

# 8286

Register Number:

Name of the Candidate:

## FOUNDATION PROGRAMME EXAMINATION December 2014

**(FIRST YEAR)**

**(PART – I)**

**110: TAMIL PAPER – I**
**(Common with Foundation Programme I Year in Music)**

Time: Three hours    Maximum: 80 marks

---

**I. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி** **(5 × 2 = 10)**

1. இராமலிங்கர் நிறுவிய சங்கத்தின் பெயரென்ன?
2. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
3. கண்ணகி கண்ட கனவு யாது?
4. சேக்கிழாரின் இயற்பெயர் யாது?
5. கம்பரை ஆதரித்த வள்ளல் பெயரென்ன?
6. இரட்சணிய யாத்திரிகம் - பொருள் தருக.
7. சீறாப் புராணத்தை இயற்றியவர் யார்?
8. எட்டுத்தொகை நூல்களுள் புறநூல்களைச் சுட்டுக.
9. சமணர்கள் மருணீக்கியாருக்குக் கொடுத்த பட்டத்தின் பெயரென்ன?
10. சிந்திய கண்ணீர் துடைப்பவர் யாரென்று கவிமணி சுட்டுகிறார்?

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விரிவான விடையளி.** **(5 × 3 = 15)**

11. ஒழுக்கமுடைமையின் சிறப்பை வள்ளுவர் வழி விளக்குக.
12. வாழ்க்கைத்துணை நலத்தின் சிறப்புக்களாக வள்ளுவர் கூறுவன யாவை?
13. நாய் பெற்ற தெங்கம்பழம் என்ற பழமொழியை விளக்கி வரைக.
14. திரிசடை சீதையிடம் கூறிய நற்கனவைச் சுட்டுக.
15. சிலுவைச் சுமந்து சென்ற இயேசுவைக் கண்டு பெண்கள் எவ்வாறு வருந்தினர்?

16. பாரி மகளிரின் கையறுநிலைப் பாடற்கருத்தைப் புலப்படுத்துக.
17. சீறாப்புராணம் - குறிப்பு வரைக.
18. நாலடியார் குறித்து நீவிர் அறிவன யாவை?

**III. எவையேனும் இரண்டிற்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.** **(2 × 3 = 6)**

19. குழலினிது யாழினிது.
20. பீடன்று.
21. நும்போர் எழுதாதே வேறொரு பேர் முன்னெழுத.
22. ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்.

**IV. அடி பிறழாமல் எழுதுக.**

23. 'அன்பிற்கும் உண்டோ' எனத் தொடங்கும் குறளையும். 'பிற' என முடியும் குறளையும் எழுதுக. **(2 × 2 = 4)**
24. 'மனமெனும் தோணி' என்னும் தேவாரப் பாடலை எழுதுக. **(1 × 5 = 5)**

**V. ஏதேனும் ஒரு வினாவிற்கு இருபது வரிகளில் விடையளி.** **(1 × 8 = 8)**

25. அசோக வனத்தில் சீதை இருந்த நிலையை விளக்குக.
26. அப்பூதியடிகளுக்கும் நாவுக்கரசருக்கும் நடந்த உரையாடலை எழுதுக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு மூன்று வரிகளில் விடை தருக.** **(3 × 2 = 6)**

27. அனிச்சப்பூ உணர்த்தும் உண்மை யாது?
28. அன்பிலாரின் தன்மையாக வள்ளுவர் கூறுவன யாவை?
29. மனோன்மணீயம் - குறிப்பு வரைக.
30. பெரிய புராணம் குறித்து எழுதுக.
31. இராமலிங்கர் இயற்றிய உரைநடை நூல்கள் யாவை?
32. பழமொழி நானூறு - குறிப்பு வரைக.

**8286**

**VII. எவையேனும் ஆறு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடை தருக.** **(6 × 3 = 18)**

33. மழையின் சிறப்பை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
34. இல்வாழ்க்கையின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவன யாவை?
35. பண்டைத் தமிழரின் போர்க்கலை குறித்து எழுதுக.
36. பாவைக்கூத்தின் பயன்பாடு குறித்து மு.வ. கூறுவன யாவை?
37. குலவிச்சை கல்லாமல் பாகம் படும் என்ற பழமொழியை விளக்குக.
38. தமிழ்த்தாயின் பெருமைகளைச் சுட்டுக.
39. முரசறைந்தவன் கூறிய செய்தியை விளக்குக.
40. தமிழக மகளிரின் விருந்தோம்பற் பண்பைப் புலப்படுத்துக.

**VIII. ஏதேனும் ஒரு வினாவிற்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.** **(1 × 8 = 8)**

41. நாஞ்சில் நாட்டு வளத்தை விவரிக்க.
42. மறக்குலப் பெண்ணின் வீரவாழ்வினை விளக்கி வரைக.
43. பெண்ணின் பெருமைகளாகக் கவிமணி கூறுவன யாவை?

%%%%%%%